## இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை – 2017

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்றும், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் 33(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந் விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீதுஅபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினைக் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தியில் வேண்டப்பட்டதன் பிரகாரம் 2017 திசெம்பர் 31 வரையிலும் நடைமுறைகள் கையேடொன்றைத் தயாரித்து அதற்காகப் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, சபையின் பிரதான வருமான மூலம் அரசாங்க மானியமாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது மீளாய்வாண்டில் ரூபா 9,698,229 அல்லது 10 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் மீண்டெழும் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 59 சதவீதம் முதல் 104.3 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்தன.

| செலவின வகை | மொத்தச் செலவினம் | | ஆதிகரிப்பு | |
|---|---|---|---|---|
| | 2017 | 2016 | | |
| | ரூபா | ரூபா | ரூபா | சதவீதம் |
| வாடகையும் கட்டிடச் சேவைக் கட்டணமும் | 11,191,842 | 6,234,891 | 4,956,951 | 79.5 |
| மீளாய்வாளர்களிற்கான தொழில்சார் கட்டணங்கள் | 1,920,000 | 940,000 | 980,000 | 104.3 |
| சுர்வதேச பிரயாணம் | 3,994,965 | 2,503,394 | 1,491,571 | 59.6 |

2016 ஆம் ஆண்டில் இயலளவைக் கட்டியெழுப்புதல் நோக்கத்திற்காக விசேட பாதீட்டு ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்ததுடன், தொழில்சார் கட்டணங்களில் ஒரு பகுதி முன்னைய ஆண்டிற்காக வழங்கப்பட்ட அந்த விசேட பாதீட்டு ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி செலுத்தப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டுமீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், குறித்துரைத்த வணிக முயற்சிகளினால் (எஸ்பீஈஎஸ்) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடனான இணங்கியொழுகுதல்களை கண்காணிப்புச் செய்வதே சபையின் பிரதான தொழிற்பாடாக காணப்படுகின்றது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாட்டில் செயற்பாட்டிலுள்ள குறித்துரைத்த வணிக நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கையினை இனங்காண்பதற்கு 2018 மார்ச் 31 வரையிலும் சபை தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்துடன், இந்த நோக்கத்திற்காக சபையினால் பொருத்தமானதொரு பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டு அல்லது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, குறித்துரைத்த வணிக முயற்சிகளினால் (எஸ்பீஈஎஸ்) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடனான இணங்கியொழுகுதல்களை உறுதிப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டில் சபை 518 நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்திருந்ததுடன், அது 2015 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்கான நிதிக்கூற்றுக்களை உள்ளடக்கியிருந்தது.

(இ) சில குறித்துரைத்த வணிக முயற்சிகள் தொடர்பில் சபையினால் கண்டுபிடிக்கப்பட்டு அந்த குறித்துரைத்த வணிக முயற்சிகளுடன் தொடர்பாடல் செய்யப்பட்டிருந்த விடயங்களின் மீது பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 சனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் நான்கு ஆண்டு காலத்திற்காக தற்போதுள்ள கட்டிடத்தின் முதலாம் மாடியினை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக சபை, இலங்கை வேதாகம இல்லத்துடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தது. இருப்பினும், மாடியின் மொத்த பரப்பினையும் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்திக்கொள்வதற்கு சபை தவறியிருந்ததுடன், அதற்குப் பதிலாக அந்த பரப்பளவு 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் சபையின் ஏனைய தற்காலிக செயற்பாடுகளிற்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டில் அதற்காகச் செய்யப்பட்டிருந்த ரூபா 5,695,341 தொகையான செலவினம் சிக்கனமற்ற செலவினமாகக் காணப்பட்டது.

(ஆ) சபைக்காக முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை (எம்ஐஎஸ்) ஆராய்ந்து, வடிவமைத்து, அபிவிருத்திசெய்து, அமுல்படுத்தும் நோக்கத்திற்காக (சபைக்கும் ஐசீரீஏ இற்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது) மீளாய்வாண்டில் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்திடமிருந்து (ஐசீரீஏ) ரூபா 1,575,000 பெறுமதியான 15 மடி கணனிகளை சபை பெற்றுக்கொண்டது. இருப்பினும், சபையினால் வழங்கப்பட்ட விளக்கமளித்தல்களின் படி முறைமையினை அபிவிருத்தி செய்து அமுல்படுத்துதல் ஐசீரீஏ இன் பாதீட்டு வரையறைகள் காரணமாக பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் கீழுள்ள உயர் முகாமைத்துவ தரத்தின் 03 பதவிகள், சிரேஸ்ட தரத்திலுள்ள ஒரு பதவி மற்றும் மூன்றாம் தரத்திலுள்ள 02 பதவிகளிற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த உயர் முகாமைத்துவ தரத்திலுள்ள 03 பதவிகளிற்காக நிரந்தர பதவியினைக் காட்டிலும் அதிகளவான நலன்களுடன் அங்கீகரிக்கப்பட்ட ஊதியத்தினை மிகைத்து கூடுதலான கொடுப்பனவுகள் செய்யப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2003 யூன் 02 ஆந் திகதி பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் சபை தொடர் திட்டமொன்றைத் தயாரித்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவிங்களிற்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

காலாண்டு அடிப்படையில் அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற இலக்குகள் நிச்சயிக்கப்பட்டு அந்த இலக்குகளிற்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று, 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.